RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s1939

OPEN ACCESS

# உடையார் நாவல் உணர்த்தும் அறநெறிகள்

பா. அன்னிபெசன்ட் [அ, *], க. ஜெயஷீலா [அ]

[அ] தமிழ்த்துறை, ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), நாகர்கோவில்-629003, தமிழ்நாடு, இந்தியா

# Ethics that the Udaiyar Novel Conveys

**P. Annibesant [a, *], K. Jayasheela [a]**

[a] Department of Tamil, Scott Christian College, (Affiliated to Manonmaniam Sundaranar University), Nagercoil-629003, Tamil Nadu, India

* Corresponding Author: pannibesant@gmail.com

Received: 19-07-2022
Revised: 15-09-2022
Accepted: 03-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Morality is the adherence to ethical ethics that do not harm others in society. Even the food should not be eaten immediately. One should eat only after giving it to others sitting around him. Ethics should be followed in all the diet, speech, and writing. Only the people who practice asceticism have the right to virtue. This section clarifies what morality means, ignoring the idea that morals cannot be practiced by ordinary people who follow worldly life. The best virtue is to live without harming others even if one is unable to do anything. Udaiyar's novel emphasizes the idea that man needs four kinds of affirmations, namely, virtue, wealth, pleasure, and home. Thiruvalluvar in particular refers to the same thing. The novel Udaiyar speaks of the moral idea of helping others in worldly life. Human beings should be kind to the poor and needy. They should strive to redress their grievances. Those who live in a higher position in society should take into consideration the interests of the people living under them and fulfill their needs. If we live away from ourselves from dirt, expectation, and innocence, our hearts will become a place where God dwells. Once one's body becomes weak and he is of no use to others and the world, he should renounce all attachments to the world except God. This study shows that by doing so, it is easier to attain salvation. In any of the actions we do in our youth, we should engage in good things that do not harm society. By doing so, society progresses and the country progresses. We can attach ourselves to the domains of home life, the creation of material wealth, and the creation of educational wealth. But in those fields, we must plant righteous acts of virtue.

**Keywords:** Udaiyar novel, Morality, Society, Help, Salvation

## முன்னுரை

அறம் என்பதற்குக் கடமை என்பது பொருள். நற்செயல்கள் செய்ய இயலாவிட்டாலும் பிற உயிர்களுக்குக் கேடு செய்யாதிருத்தலே சிறந்த அறமாகும். விருந்தினரை எதிர் கொண்டழைத்து இன்முகத்தோடு உபசரித்தல் நல்லறமாகும். மூவகைப்பட்ட துறவறத்தோர்களை வருந்தியழைத்து உணவு முதலியன கொடுத்தல் அறமாகும். துன்பத்தில் துணை நிற்றலுடன் கைம்மாறு கருதாது உதவி செய்தல் சிறந்த அறமாகும். ஐங்குரவர்களை வணங்குதல் யாவர்க்கும் அறமாகும். இறைவன் தாள்பணிதல் யாவர்க்கும் கடமையாகும். அறத்தை வற்புறுத்திக் திருக்குறள் முதலாக நீதிநூல்கள் அனைத்தும் விளக்குகின்றன. உடையார் நாவலில் அமைந்துள்ள அறநெறிகள் குறித்து இக்கட்டுரை அமைகின்றது.

## அறம், பொருள் விளக்கம்

தருமம், இல்லறம், துறவறம், புண்ணியம் என்று அமையும் அனைத்தும் அறக்கோட்பாட்டில் முக்கிய இடம் பெறுகின்றன. அறம் குறித்து திருக்குறள்

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்

அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு"

என்று மற்றவருக்கு மறந்து கூட கேடு விளைவிக்கக்கூடாது என்கிறார் (Parimelzhagar, 1999). அறத்துப்பால் என்னும் அதிகாரத்தில் ஒழுக்க நெறிமுறைகளை எடுத்துரைக்கிறார். அவற்றை தனிமனிதர் தங்கள் வாழ்க்கையில் கடைபிடித்தல் இக்கால சூழலில் அவசியம் ஆகின்றது.

## உடையார் நாவல்

பாலகுமாரன் அவர்களால் எழுதப்பட்ட உடையார் நாவல் சோழர்களின் வரலாற்றைக் கற்பனைத்திறனுடன் எடுத்துரைக்கின்றது. உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் தமயன் மதுராந்தகன் என்னும் உடையாரின் சிற்றப்பாவால் கொலை செய்யப்படுகிறான். உடையார் ஆட்சி பொறுப்பை ஏற்ற பின் அக்கொலைக்குக் காரணமானவர்களைத் தண்டிக்காமல் விட்டு விடுகிறார். உடையார் அறக்கோட்பாட்டை பின்பற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இருப்பினும் நீதி பிறழாமல் இருக்க அவர்களை நாடு கடத்துகின்றார்.

## தண்டனை வழங்கும் முறை

மனுநீதிச் சோழன் ஆவினைக் கொன்ற தன் மகனை தேர்க்காலில் செலுத்திக் கொன்று விடுகிறான். சங்க காலத்தில் விலங்கு, மனிதன் என அனைவருக்கும் சமமாக நீதி வழங்கியமை சிறந்த அறமாகக் கருதப்பட்டுள்ளமை தெளிவாகின்றது. உடையார் நாவலில் உடையார் பகைவர்களை அழிக்க எண்ணவில்லை அறவழியை நாடினார் இறைபணியை மேற்கொண்டார். திருக்குறள் அறம், பொருள், இன்பம் வீடு என்னும் நான்கு உறுதி பொருட்களைக் குறிப்பிடுகின்றது. இவைகளை வாழ்வில் கடை பிடிக்கும் பொழுது அவைகளால் ஒழுக்கக் கேடுகள் நிகழாமல் பார்த்துக் கொள்வது அவசியம். உடையார் குடும்ப வாழ்வில் முக்கியத்துவம் கொடுத்து அதனைச் சிறப்பாக செயலாற்றினார். தன் மனைவிகளிடம் இறைப்பற்றைக் குறித்து அறிவுரை வழங்கினார்.

## உடையார் நாவலில் அறக்கோட்பாடுகள்

உலக வாழ்க்கையை விரும்பாத துறவிகளுக்கு மட்டும் அறம் பொருந்தும் ஏனைய உலக மக்களுக்கு பொருந்தாது என்னும் கருத்தை உடையார் நாவல் மறுக்கிறது. உடையார் நாவலின் கருத்துப்படி உலகில் வசிக்கின்ற அனைத்து மக்களுமே அறக்கோட்பாடுகளைப் பின்பற்றலாம் என்பதை உடையார் நாவல் தெளிவுபடுத்துகின்றது.

## இளவரசன் இராஜேந்திரன்

பாரதியார் சாதியை எதிர்த்து குரல் கொடுத்தார். கற்று அறிந்த சான்றோர்கள் இன்றளவும் சாதியை ஒழிக்கப் போராடி வருகின்றனர். இளவரசன் இராஜேந்திரனும் பிற்காலச்சோழர்களின் ஆட்சியில் எளிய மக்களுக்காகக் குரல் கொடுத்தான். எளிய மக்களும் காலில் செருப்பு அணியவும் குடிசை வீடுகளை அகற்றி கல் வீடுகளில் வசிக்கவும் ஏற்பாடு செய்தான். "ஓர் மனிதன் தான் சுகம்பெற வேண்டுமாயின் பிறர் சுகத்தை முன்பு கருதல் வேண்டும்" என்னும் அறிஞர் அலாய்சியஸ்ஸின் கருத்திற்கு ஏற்ப வாழ்ந்தவர் இளவரசன் இராஜேந்திரன் ஆவார் (Gnana Aloysius, 1999). மக்களின் குறைகளைக் கண்டறிய இளவரசன் இராஜேந்திரன் மாற்று வேடத்தில் சென்று கம்மாளருடன் நெருங்கி

உட்கார்ந்து உணவு உண்டான். இவ்வாறு ஏழை எளிய மக்களை பாதுகாக்கும் எண்ணம் சிறந்த அறமாகும்.

## சோழ தேசத்துப் பெண்களின் அறச்செயல்கள்

மன்னராட்சியில் மன்னர் தனக்குகீழ் வறுமையில் வாடும் கவிபாடும் புலவர்களை ஆதரித்தல் சிறந்த அறமாகும். பண்பாட்டு வளர்ச்சியின் விளைவாக கவிபாடும் புலவர்கள் மட்டுமின்றி பிற்காலச் சோழர்களின் ஆட்சியில் குறிப்பாக உடையாரின் ஆட்சியில் கலைஞர்களும் உருவாகினர். அவர்களுள் சீருடையாள் என்னும் பெண் நடனக் கலையில் வல்லவளாகத் திகழ்ந்தாள். அவளின் திருமணத்திற்கு பஞ்சவன்மாதேவி "காரை என்ற அட்டிகையும் பெரியஹாரமும் பரிசாகக் கொடுத்தனுப்பினாள்" (பாலகுமாரன்,2017) இவ்வாறு கலைஞர்களை ஊக்குவிப்பதும் சிறந்த பண்பாகும். தான் அறிந்ததைப் பிறருக்கு கற்பித்துக் கொடுப்பதால் கலை வளர்ச்சியடைகிறது. சோழ தேசத்தில் தலைக்கோலிப் பெண்கள் நடனம் ஆடுவதில் பயிற்சிப் பெற்று தேர்ச்சியடைந்து பிறருக்கு நடனத்தைக் கற்பித்துக் கொடுத்தனர்.

## மருத்துவ அறம்

சோழ தேசத்தில் பிற்காலச் சோழராட்சியில் அந்தணர் குலப்பெண்கள் மருத்துவத் துறையில் சிறந்து விளங்கினர். தங்களை நாடிவரும் தங்களைப் போன்ற பெண்களுக்கான உதவிகளையும் நோய்க்கான மருத்துவத்தையும் அவர்கள் மேற்கொண்டனர். இதற்கு உடையார் நாவலில் இடம் பெறும் அந்தணப் பெண்மணி சான்றாகத் திகழ்கிறார். இளவரசர் இராஜேந்திரனால் காஞ்சியிலிருந்து அனுப்பப்பட்ட பெண் இராஜராஜி அவள் தஞ்சைக்கு வரும் வழியில் ஆற்று நீரால் அடித்துச் செல்லப்பட்டு பிரம்மராயரின் உதவியுடன் உயிர் பிழைக்கிறாள். அவளுக்குத் தஞ்சையில் உள்ள அந்தணப் பெண்மணி எந்தப் பலனையும் எதிர் பார்க்காமல் உதவி செய்தாள். "காயங்களுக்கு மருந்துக்களிம்பு தடவினாள்" (Balakumaran, 2017).

சேர, பாண்டிய நாட்டு அந்தணர்கள் தாழ்ந்த ஜாதி மக்களைத் தீண்டுவதற்கு அஞ்சுவர். ஆனால் சோழ தேசத்து அந்தணர் குலப் பெண்கள் பாகுபாடின்றி எல்லா குலத்தினருக்கும் மருத்துவ உதவிகள் புரிந்தனர்.

## பஞ்சவன்மாதேவி

பஞ்சவன்மாதேவி பிற உயிருக்கு தீங்கு செய்ய விரும்பாதவள். அவள் சிறுவயதிலேயே இறைப்பற்று மிக்கவள். வீடுபேற்றை அடைய வேண்டுமென்றால் அதற்குக் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளை நன்கு அறிந்தவள். அவளைத் தேடி ஒருமுறை பகைநாட்டினர். போரிடும் நோக்கில் தஞ்சை வந்தடைந்தனர் உடையார். அப்பொழுது அரசவையில் இல்லை. பகைவர்களின் நிலையை நன்குணர்ந்த பஞ்சவன்மாதேவி பசிக்காகத் தானே இவ்வளவு தூரம் உணவுக்காகப் படையெடுத்து வந்தீர்கள் என்று அவர்களிடம் குறிப்பிட்டு உணவளித்து அனுப்பினாள். இவ்வாறு அறவழிகளைக் கடைபிடித்தால் நாட்டில், ஒற்றுமை நிலவும் என்பது உடையார் நாவல்வழி அறியப்படுகின்றது.

சோழர்கள் தஞ்சை பெரியக் கோவிலை எழுப்புவதற்காக அடிமை வீரர்களைப் பயன்படுத்தினர். ஆனால் அவர்களைச் சோழர்கள் அடிமை போன்று நடத்தவில்லை. அவர்கள் விரும்பினால் மட்டுமே கோவில் பணிக்கு அனுப்பப்பட்டனர். அவர்களுக்கு உணவு வகையிலும் சோழர்கள் பாகுபாடு காட்டவில்லை. சேர தேசம், பாண்டிய தேசம், கீழைச்சாளுக்கியம், கங்கம் உள்ளிட்ட அனைத்து வீரர்களுக்கும் சோழ வீரர்களுக்கு வழங்கப்பட்ட உணவையே வழங்கி சிறப்பித்தனர்.

## விருந்தோம்பல் சிறப்பு

விருந்தோம்பல் என்பது தமிழர்களின் தலை சிறந்த பண்பாடு ஆகும். சோழர்களின் விருந்தோம்பல் பாண்டியர்களை வியக்க வைத்தது. பாண்டிய தேசத்துப் பெண்கள் ஆண்களுக்கு உணவு பரிமாறுவது இல்லை. சோழ தேசத்துப் பெண்கள் வீரர்களுக்கு உணவு பரிமாறினர்.

“அவாவினை ஒழித்துத்துறந்து உண்ணாது நோற்றல் நன்மையாம் விருந்தினரைக் கண்ணோட்டம் செய்தல் நன்மையாம்” (இராசாராம்,1996) என்று சிறுபஞ்சமூலம் உணவு அளிக்கும் முறையை சிறந்த அறமாக வலியுறுத்துவது உடையார் நாவலிற்கும் பொருந்துகின்றது. சோழ தேசத்தில் பெண்களும் அறச்செயல்களைச் செய்வதற்கு எத்தகைய தயக்கம் இன்றி துணிச்சலுடன் செயல்பட்டனர். “சோழர்கள் தங்களை நாடி வந்த வணிகர்களை நீர், மோர் கொடுத்து உபசரித்தனர்” இவ்வாறு சோழர்கள் எளிய மக்களையும் நன்றாகக் கவனித்தனர் (Balakumaran, 2017). இவைகளால் சோழர்கள் சிறந்த விருந்தோம்பல் பண்புடையவர்கள் என்பது தெளிவாகின்றது.

அற வழிமுறைகளில் மிகவும் சிறந்தது இறைப்பற்றாகும். இராஜராஜ சோழர் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியதன் மூலமும் கோயில் வேலைகளில் அந்நாட்டின் எல்லா மக்களும் இணைந்து எல்லா பணிகளிலும் தொடர்பு கொண்டதாலும் சோழர்களின் இறைப்பற்றை உடையார் நாவல் வழி அறியலாம். ஒரு மனிதன் தன்னிடம் உள்ள அழுக்காறு அவா, வெகுளி அகிய மூன்றையும் விட்டு விட வேண்டும். அப்பொழுது மனிதனின் மனம் இறைவன் குடிகொள்ளும் இடமாக மாறும். பஞ்சவன்மாதேவி இவை மூன்றையும் தன்னைவிட்டு விலக்கினாள். அவளுக்கு உடையாரை மிகவும் பிடிக்கும். தனக்கு பிடித்த அவரை நினைப்பதை விட்டு விட்டு இறைவனை மட்டும் நினைத்தாள்.

“சிவபெருமானை வழிபடும் உயிர் சிவ பெருமான் திருவடிகளில் தலைப்பட்டு பேரின்ப வெள்ளத்தில் மூழ்கும், நான் என்ற உணர்வழிந்து தான் என்ற நிலை எய்தும்” என்று குறிப்பிடும் கருத்துக்கள் பஞ்சவன்மாதேவிக்கு பொருந்துகிறது (Singaravelan,1996).

பஞ்சவன்மாதேவி உலக வாழ்க்கையில் தன்னால் இனி பிறருக்கு உதவ முடியாது என்று அறிந்த பின்பு உலகப்பற்றைத் துறந்தாள். இறுதியாக இறந்த பின்பு வீடுபேற்றை அடைந்தாள்.

## முடிவுரை

அறம் என்பது எந்த உயிருக்கும் தீங்கு செய்யாமல் நீதி நெறி தவறாமல் உலகில் வாழவேண்டும். தான் வலிமையுடன் இருக்கும் வரையில் பிறருக்கு உதவி செய்வதில் விழிப்புடன் செயல்படவேண்டும். கல்வி, பழக்க வழக்கம் பேச்சுமுறை எழுதும் முறை என அனைத்திலும் சிறப்பாக ஒழுக்க முறைகளைக் கடைபிடிக்க வேண்டும். தன்னுடைய உடல் வலிமை குன்றிய பின் தன்னிடம் உள்ள அனைத்து ஆசைகளையும் ஒழிக்க வண்டும். இவ்வாறு செய்தால் சிறு வயதில் செய்த அறச்செயல்கள் நாம் இறந்த பின்பு நமக்கு வீடுபேற்றை அளிக்கின்றது என்பது இவ்வாய்வுக் கட்டுரையின் மூலம் அறியப்படுகின்றது.

## References


Balakumaran, (2017) Udayar Paagam 1, Visa Pathippagam, Chennai, India.

Gnana Aloysius, (1999) Ayothithasar Sinthanaikal Thoguthi-1, Nattar valakkatriyal aaivumaiyam, Palayangkottai, India.

Parimelzhagar, (1998) Thirukkural, Paari Nilaiyam, Chennai, India.

Singaravelan, S. (1996) Muvartamil, Manivasagar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License